# அந்திக்கிறிஸ்து

## Anti Christ - Against Christ

*2 தெச 2:3 எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை*
*மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில்*
*விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய*
*பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.*
*4 அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவனென்னப்படுவதெதுவோ,*
*ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத்*
*தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில்*
*தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று*
*காண்பிக்கிறவனாயும் இருப்பான்.*
*5 நான் உங்களிடத்திலிருந்தபோது இவைகளைச் சொன்னது*
*உங்களுக்கு ஞாபகமில்லையா?*
*6 அவன் தன் காலத்திலே வெளிப்படும்படிக்கு, இப்பொழுது*
*அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே.*
*7 அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது;*
*ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது*
*வெளிப்படாது.*
*8 நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்;*
*அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து,*
*தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்.*

**"அந்திக்கிறிஸ்து"** என்ற வார்த்தை, வேதாகமத்தில் 4 இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது *( 1 யோவான் 2:18, 22; 4:3; 2 யோவான் 1:7 ).* இதற்கான கிரேக்க வார்த்தை "antichristos" என்பதாகும். "anti" - எதிர்ப்பவன், எதிரானவன். "Christos" – அபிஷேகம் பண்ணப்பட்டவர், மேசியா. ஆக, 'antichristos" என்ற கிரேக்க வார்த்தையின் சரியான அர்த்தம் **"எதிர்கிறிஸ்து** அல்லது **கிறிஸ்துவுக்கு எதிரானவன்'**.

## வேதாகமத்தில், அந்திக்கிறிஸ்துவைக் குறிப்பிடும் மற்ற சில பெயர்கள்;

**அசீரியன்** *( ஏசாயா 10:24 ),* **பாபிலோனின் ராஜா** *( ஏசாய 14:4 ),* **சங்கரிக்கிறவன், ஒடுக்குகிறவன்** *( ஏசா 16;4 ).* **சின்ன கொம்பு** *( தானி 7:8,24 ),* **சாமர்த்தியமான ஒரு ராஜா** *( தானி 8:23 ),* **வரப்போகிற பிரபு** *(தானி 9:26),* **வடதிசை ராஜா** *(தானி 11:5-45),* **கேட்டின் மகன், பாவ மனுஷன்** *(2 தெச 2:3 ),* **அக்கிரமக்காரன்** *( 2 தெச 2:8-12 ),* **மிருகம்** *(தானி 7:11, வெளி 13 )*

சபை எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பே, அந்திக்கிறிஸ்து உலகத்தில் பிறந்து வளர்ந்து இருக்க வேண்டும். அவன் அமைதியான, சமாதானத்தோடு நடந்து கொள்கிற ஒரு அரசியல்












தலைவனாக இருக்க வேண்டும் *( 1 தெச 5:1-3 )*. . இன்றையை நிலையில் ஐரோப்பிய கூட்டமைப்பில் **27** நாடுகள் உள்ளன ( Source;Wiki ). ஒரு யுத்தத்தின் மூலம் இந்த நாடுகளும், ஆப்பிரிக்க கண்டத்தின் சில பகுதிகளும், ரஷ்யாவின் சில பகுதிகளும் இணைக்கப்பட்டு **10** நாடுகளாக மாறும் *( தானியேல் 7:23-24 ).* இந்த **10** நாடுகளும் புதுப்பிக்கப்பட்ட ரோம சாம்ராஜ்யத்தைப் போன்ற நிலப்பகுதிகளை கொண்டதாக இருக்கும். இந்த **10** நாடுகளையும்தான் தானியேல் இரண்டாம் அதிகாரத்தில் **"சிலையின்" பாதத்தின் 10 விரல்களும்**, *தானி 7; வெளி 12;13;17* ம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள **மிருகத்தின் 10 கொம்புகளும்** குறிப்பிடுகிறது. அந்திக்கிறிஸ்து இந்த 10 நாடுகளின் ஒன்றில் இருந்துதான் வரவேண்டும். இந்த 10 நாடுகளும் கொஞ்சம் காலம் *( வெளி 17: 10 )* இருக்கும்.




இந்த நாடுகளை தன் ஆளுகையின் கீழ் கொண்டுவருவதற்காக, அந்திக் கிறிஸ்துவுக்கு, இஸ்ரவேலின் பணமும் திறமையும் அவசியமாக இருக்கும். அதனால் சமாதானம் என்ற போர்வையில், இஸ்ரவேலை பாதுகாப்பதற்கும் தேவாலயம் மீண்டும் கட்டப்படுவதற்கும், இஸ்ரவேலோடு ஒரு உடன்படிக்கை செய்து கொள்வான். இது 7 வருடங்களுக்கான உடன்படிக்கையாக இருக்கும் *( தானி 9:27 ).*




அதன் பின் ஒரு யுத்தத்தின் மூலம், அந்திக்கிறிஸ்து இந்த 10 நாடுகளில் 3 நாடுகளை கைப்பற்றுவான். மற்ற 7 நாடுகளும் அவனுக்கு கீழ்ப்படிந்திருக்கும். *வெளி 17:8-17* ல் குறிப்பிடப்பட்டுள்ள **8 வது சாம்ராஜ்யத்தை** அவன் நிறுவுவான் *( தானி 7:23-24; வெளி 8-17 ).*




பின், மகாஉபத்திரவக்காலத்தின் தொடக்கத்தில், அதாவது இயேசுவின் இரண்டாம் வருகைக்கு 3 ½ வருடங்களுக்கு முன்பு, இந்த 10 நாடுகளும், அந்திக் கிறிஸ்துவின் தலைமையில், பழைய ரோம சாம்ராஜ்யத்தின் நிலப்பரப்புக்கு வடக்கிலும், கிழக்கிலும் இருக்கிற நாடுகளோடு யுத்தம் பண்ணி அவைகளை தோற்கடிக்கும் *(தானி 11:44 ).*

அந்திக்கிறிஸ்து இஸ்ரவேலோடு செய்து கொண்ட உடன்படிக்கையை முறித்து தேவாலயத்தை தன்வசமாக்கிக்கொள்வான் *( விசுவாச துரோகம் 2 தெச 2:3 ).* உலகம் தன்னை ஆராதிக்கும்படியாக வறுபுறுத்துவான் *(வெளி 13 ).*




அவனை ஆராதிப்பதன் மூலம் சாத்தானை ஆராதிக்கும் ஒரு உலகளாவிய சபையை ஏற்படுத்துவான். இதைத்தான் **பாழாக்கும் அருவறுப்பு** *( மத் 24:15, தானி 9:27 )* என்று வேதாகமம் அழைக்கிறது. அதன்பின் அடுத்த 3 ½ வருடங்கள் அவனால் மிகுந்த உபத்திரவம் உண்டாயிருக்கும் *( மத் 24:21; வெளி 13:15-17 ).* மிருகத்தின் முத்திரை பதிக்காதவர்களால் வாங்கவோ விற்கவோ முடியாது *( வெளி 13:16-17 )*




பின் அந்திக்கிறிஸ்து தன் கீழிருக்கும் நாடுகளை சேர்த்துக்கொண்டு எருசலேமின் மேல் படையெடுத்து வருவான். அப்போது அர்மகெதோன் யுத்தத்தில், இயேசு கிறிஸ்து அவனையும் அவனோடு உள்ள ராஜ்யங்களையும் தோற்கடிப்பார் *( எசே 38-39; சக 14; வெளி 19:11-21 ).*

அந்திக்கிறிஸ்து பிடிக்கப்பட்டு *( வெளி 19:11-21 )* கந்தகம் எரிகிற அக்கினிக்கடலில் உயிரோடே தள்ளப்படுவான்.

## அந்திக்கிறிஸ்து யார் ?
## அவன் எப்படிப்பட்டவனாக இருப்பான்.




1. "**பாவ மனுஷன்**". அவன் தீமையின் மொத்த உருவமாகவும், வேதத்துக்கு எதிரானவனாகவும் இருப்பான் எடுத்துக்கொள்ளப் படுதல் சம்பவிக்கு முன்பே உலகில் இருக்கிறவனாக அந்திக்கிறிஸ்து இருக்க வேண்டும். *( 2 தெச 2:3,8-12; வெளி 13:1- 18; 14:9-13; 15:2-4; 16:2-12.)*
2. "**கேட்டின் மகன்**". யூதாஸைப்போல அழிவுக்காக நிர்ணயிக்கப் பட்டிருக்கிறான் *( 2 தெச 2:3,8-12 ).*
3. அவன் வெளிப்படுவான் *( 2 தெச 2:3 ).*
4. தேவனை எதிர்க்கிறவன். தேவனுக்கு எதிராக தன்னை உயர்த்துவான் *( 2 தெச 2:4 ).*




5. தேவனைப்போல ஆராதனையை ஏற்றுக்கொள்வான் *(2 தெச2:4 ).*
6. வருங்கால எருசலேம் தேவாலயத்தில் அவன் தொழுது கொள்ளப்படுவான் *( 2 தெச 2:4; தானி 9:27; மத் 24:15-21 ).*
7. தன்னை தேவன் என்று காண்பிப்பான் *( 2 தெச 2:4 ).*
8. அவன் வெளிப்படுவதை இப்போது "**சபை**" தடுத்துக்கொண்டிருக்கிறது *( 2 தெச 2:7 ).*
9. அவன் வெளிப்பட்ட பிறகு, இயேசுவின் இரண்டாம் வருகை வரையில் உயிரோடிருப்பான், அர்மகெ தோன் யுத்தத்தில் இயேசுவுக் கெதிரான படைகளின் தலைவனாக இருப்பான், இயேசுவால் அழிக்கப்படுவான் *( 2 தெச 2:8; வெளி 19:11-21; தானி 7:24-28; 8:23- 27; 9:27; 11:36-45; 12:1- 7; மத் 24:15-31 ).*




10. அவன் ஒரு மனிதன். இயேசுவால் அர்மகெதோன் யுத்தத்தில் கொல்லப்படுவான் *( 2 தெச 2:8; தானி 7:11; 8:25; ஏசா 11:4; வெளி 19:11-21).*
11. உலகத்துக்கு ஒரு சர்வாதிகாரியை உருவாக்கும் சாத்தானுடைய கடைசி முயற்சியில், சாத்தானின் பிரதிநிதியாக அந்திக்கிறிஸ்து இருப்பான் *( 2 தெச 2:9; தானி 8:24; 11:37-39; வெளி 13:2 ).*
12. சாத்தானிடம் இருந்து அற்புத வல்லமை அவனுக்கு

கொடுக்கப்பட்டிருக்கும் *( 2 தெச 2:9; தானி 8:24: 11:37-39; வெளி 13:2,11-18; 16:13-16; 19:20; மத் 24:24 ).*

**13.** அவன் வஞ்சகக்காரனாக இருப்பான் *( 2 தெச 2:10; தானி 8:24 25; 9:27 ).*

**14.** கெட்டுப்போனவர்கள் அவனை பின்பற்றுவார்கள் *( 2 தெச 2:10-12. வெளி 13:1-18; வெளி 19:20 ).*

**15.** பாபிலோனின் ராஜா *( ஐசா 14:4 ).*

**16.** அந்திக்கிறிஸ்து, சாத்தானின் அவதாரம் அல்ல. சாத்தான் வேறு அந்திக்கிறிஸ்து வேறு *( 2 தெச 2:8-9; வெளி 13:1-18; 16:13-16; 20:20.*

**17.** *தானியேல் 11:36 - 12:13* வரை உள்ள வசனங்களின்படி "வடதிசை ராஜா" "சிரீயாவின்" ராஜாவாக இருக்கக்கூடும்.

## அந்திக்கிறிஸ்துவின் மூன்று சின்னங்கள்

1. **ஒரு முத்திரை** *( வெளி 13:16-17; 14:9-11; 15:2; 16:2; 20;4-6).* அது வலது கையிலாவது நெற்றியிலாவது தரிக்கப்பட்டிருக்க வேண்டும் *( வெளி 13:16; 14:9 ).*

2. **நாமம்** *( வெளி 13:17; 14:11 )* இந்த நாமம் என்ன என்று வேதாகமத்தில் சொல்லப்படவில்லை.

3. **நாமத்தின் இலக்கம் 666** *( வெளி 13:17-18; 15:2 13:18 )*

அந்திக்கிறிஸ்துவின் பெயரின் (கிரேக்க மொழியில்) எண்ணம் **666** ஆக இருக்கும் (கிரேக்க, எபிரேய மொழிகளில் ஆங்கிலத்தை போல ஒரு தனிப்பட்ட எண் எழுத்துக்கள் இல்லை. மொழி எழுத்துக்களே எண்களுக்காக உபயோகப் படுத்தப் படுகின்றன...Dake's ).

உபத்திரவக்காலத்தின் கடைசி 3 ½ வருடங்களுக்கு முன்பாக யாராலும் அந்திக்கிறிஸ்துவின் சின்னங்களை எடுத்துக்கொள்ள முடியாது *(வெளி 11:1-3; வெளி 12:6,14; 13:5 ).*

### அன்பு சகோதர/சகோதரி!

அந்திக்கிறிஸ்துவின் வெளிப்படுதலை இப்போது தடுத்துக் கொண்டிருக்கிறது "சபை" - அதாவது இரட்சிக்கப்பட்டு தேவனோடு நல்லுறவில் வாழ்ந்து கொண்டிருக்கிற விசுவாசிகள். ஆனாலும் இந்த தடைசெய்தல் நிரந்தரமானது அல்ல. சபை எடுத்துக் கொள்ளப்படும்போது ( Rapture ) தடை நீக்கப்படும், அந்திக்கிறிஸ்து வெளிப்படுவான். அந்திக்கிறிஸ்து அரசாளும் 7 வருடங்களும் உலகத்தில் இதுவரையிலும் இல்லாத












உபத்திரவங்கள் உண்டாயிருக்கும். ஆகவே அந்திக்கிறிஸ்து வெளிப்பட்ட பிறகு அவனை நாம் யாரும் சந்திக்கக்கூடாது. மாத்திரமல்ல, நம்மை சுற்றியிருக்கும் யாரும் சந்திக்கக்கூடாது. அதற்கு ஒரே வழி "இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்படுவது, எடுத்துக்கொள்ளப்படுவது".

நீங்கள் இரட்சிக்கப்பட்டவர்களானால் ஆயத்தமாயிருங்கள், மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துங்கள்.

யோவான் 3:18 *அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று.*




***( குறிப்பு: இதன் தொடர்ச்சியாக*** **- உபத்திரவக்காலம், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை, ஆயிர வருட அரசாட்சி, வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு - போன்ற வேதபாடங்கள் வெளியிடப்படும். தயவு செய்து தொடர்ந்து படித்து பயனடையுங்கள். )**

**நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். ஆசீர்வாதமாக இருங்கள்.**

**Bro D.Vergin Kumar.**

If you need any clarifications, if you have any doubts kindly contact me at deeveekumar@yahoo.com Ph: 968 25572195, 99663557.

Resources; International Standard Bible Encyclopedia, The Bible Exposition commentary - New Testament, Dakes bible commentary, Andrew Wommack Bible commentary, Vine's Expository Dictionary of Old Testament Words, Vine's Expository Dictionary of New Testament Words, Strong's Bible Concordance, Vincent's Word Studies in the New Testament, Scofield's Bible Dispensational Plan. Wuest's word studies from the Greek New Testament. The Biblical Illustrator (New Testament). All Bible quotes are from King James Version. In Tamil Bible, some verses me be above or below than the mentioned English Bible verse.